ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி
# 5.3 – மாசறு சோதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.3 – மாசறு சோதி

‡ மாசறு சோதி ⋆
என் செய்ய வாய் மணிக் குன்றத்தை ⋆
ஆசறு சீலனை ⋆
ஆதி மூர்த்தியை நாடியே ⋆
பாசறவெய்தி ⋆
அறிவிழந்தெனை நாளையம் ⋆
ஏசறும் ஊரவர் கவ்வை ⋆
தோழீ ! என் செய்யுமே ‖ **5.3.1** ‖

என் செய்யும் ஊரவர் கவ்வை ⋆
தோழீ ! இனி நம்மை ⋆
என் செய்ய தாமரைக் கண்ணன் ⋆
என்னை நிறை கொண்டான் ⋆
முன் செய்ய மாமை இழந்து ⋆
மேனி மெலிவெய்தி ⋆
என் செய்ய வாயும் கரும் கண்ணும் ⋆
பயப்பூர்ந்தவே ‖ **5.3.2** ‖

ஊர்ந்த சகடம் ⋆
உதைத்த பாதத்தன் ⋆
பேய் முலை சார்ந்து சுவைத்த செவ்வாயன் ⋆
என்னை நிறை கொண்டான் ⋆
பேர்ந்தும் பெயர்ந்தும் ⋆

அவனோடன்றி ஓர் சொல் இலேன் ⋆
தீர்ந்த என் தோழீ ! ⋆
என் செய்யும் ஊரவர் கவ்வையே ‖ **5.3.3** ‖

ஊரவர் கவ்வை எரு இட்டு ⋆
அன்னை சொல் நீர் மடுத்து ⋆
ஈர நெல் வித்தி முளைத்த ⋆
நெஞ்சப் பெரும் செய்யுள் ⋆
பேரமர் காதல் ⋆
கடல் புரைய விளைவித்த ⋆
கார் அமர் மேனி ⋆
நம் கண்ணன் தோழீ ! கடியனே ‖ **5.3.4** ‖

கடியன் கொடியன் நெடிய மால் ⋆
உலகம் கொண்ட அடியன் ⋆
அறிவரு மேனி மாயத்தன் ⋆
ஆகிலும் கொடிய என் நெஞ்சம் ⋆
அவன் என்றே கிடக்கும் எல்லே ⋆
துடி கொள் இடை மடத்தோழீ ! ⋆
அன்னை என் செய்யுமே ‖ **5.3.5** ‖

அன்னை என் செய்யில் என் ⋆
ஊர் என் சொல்லில் என் தோழிமீர் ⋆
என்னை இனி உமக்காசை இல்லை ⋆
அகப்பட்டேன் ⋆
முன்னை அமரர் முதல்வன் ⋆
வண் துவராபதி மன்னன் ⋆

மணிவண்ணன் ⋆
வாசுதேவன் வலையுளே ॥ **5.3.6** ॥

வலையுள் அகப்படுத்து ⋆
என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு ⋆
அலை கடல் பள்ளி அம்மானை ⋆
ஆழிப் பிரான் தன்னை ⋆
கலை கொள் அகல் அல்குல் தோழீ ! ⋆
நம் கண்களால் கண்டு ⋆
தலையில் வணங்கவும் ஆம் கொலோ ⋆
தையலார் முன்பே ॥ **5.3.7** ॥

பேய் முலை உண்டு சகடம் பாய்ந்து ⋆
மருதிடைப் போய் முதல் சாய்த்து ⋆
புள் வாய் பிளந்து களிறட்ட ⋆
தூ முறுவல் தொண்டை வாய்ப் பிரானை ⋆
எந்நாள் கொலோ ⋆
யாம் உறுகின்றது தோழீ ! ⋆
அன்னையர் நாணவே ॥ **5.3.8** ॥

நாணும் நிறையும் கவர்ந்து ⋆
என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு ⋆
சேண் உயர் வானத்திருக்கும் ⋆
தேவ பிரான் தன்னை ⋆
ஆணை என் தோழீ ! ⋆
உலகு தோறலர் தூற்றி ⋆
ஆம் கோணைகள் செய்து ⋆
குதிரியாய் மடல் ஊர்துமே ॥ **5.3.9** ॥

யாம் மடல் ஊர்ந்தும் ⋆
எம் ஆழி அங்கைப் பிரான் உடை ⋆
தூ மடல் தண்ணம் துழாய் ⋆
மலர் கொண்டு சூடுவோம் ⋆
யாம் மடம் இன்றித் ⋆
தெருவு தோறயல் தையலார் ⋆
நா மடங்காப் பழி தூற்றி ⋆
நாடும் இரைக்கவே ‖ **5.3.10** ‖

‡ இரைக்கும் கருங்கடல் வண்ணன் ⋆
கண்ண பிரான் தன்னை ⋆
விரைக் கொள் பொழில் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
நிரைக் கொள் அந்தாதி ⋆
ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
உரைக்க வல்லார்க்கு ⋆
வைகுந்தம் ஆகும் தம் ஊர் எல்லாம் ‖ **5.3.11** ‖

அடிவரவு — மாசறு என்செய்யும் ஊர்ந்த ஊரவர் கடியன் அன்னை வலையுள் பேய்முலை நாணும் யாம் இரைக்கும் ஊர்

மாசறு சோதி முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்